நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**துணைத் தொழிலாக காளான் வளர்ப்பில் ஈடுபட யோசனை**

First Published : 20 May 2010 10:55:23 AM IST

தேனி, மே 19: வருமானத்தை அதிகரிக்கும் வகையில் துணைத் தொழிலாக, விவசாயிகள் குறைந்த முதலீட்டில் காளான் வளர்ப்பில் ஈடுபடலாம் என பெரியகுளம் தோட்டக்கலை உதவி இயக்குநர் எஸ். முத்தையா தெரிவித்தார்.

இதுபற்றி, அவர் மேலும் கூறியதாவது:

காய்கறி மற்றும் பழங்களை விட காளானில் அதிக புரதச் சத்து உள்ளது.

காளானைப் பயன்படுத்தி காளான் சூப், குருமா, வறுவல், பொரியல், சிப்ஸ், சாப்ஸ், ஆம்லெட் பனீர், சப்ஜி, கூட்டு, சப்பாத்தி, பரோட்டா, ஊறுகாய், வடை, சமோசா, பக்கோடா, புலவு, பிரியாணி, கட்லெட், ரோஸ்ட், புட்டு, அடை, பச்சடி, வடகம் ஆகிய உணவுப் பொருள்களை பொதுமக்கள் அதிகளவில் தயாரிக்கின்றனர்.

தேவை அதிகரித்து வருவதால், காளானுக்கு நல்ல விலை, போதிய விற்பனை வசதி உள்ளது.

காளான் பூசண வகையைச் சேர்ந்தது. ஒளிச் சேர்க்கையில் ஈடுபடுவதால் இவை, பச்சையம் இல்லாத தாவர இனத்தில் சேர்கிறது.

காளானில் புரதம் 2.9 சதவீதம், கொழுப்பு- 0.4, மாவுப் பொருள் 5.3 மற்றும் நார்ப் பொருள்கள் 11 சதவீதம் உள்ளன. மேலும் லைசின், டிரிப்டோபேன் ஆகிய அமினோ அமிலங்கள் மற்றும் வைட்டமின் சி ஆகியவையும் அடங்கி உள்ளன.

காளானில் சிப்பிக் காளான், மொட்டுக் காளான் ஆகியவை அதிகம் விற்பனையாகும்
ரகங்கள் ஆகும்.

சிப்பிக் காளானில் கோ-1, ஏ.பி.கே-1, எம்.டி.யு-1, ஊட்டி-2 ஆகிய ரகங்களும், மொட்டுக்காளானில் ஊட்டி-1 ஆகிய ரகங்களும் உள்ளன.

காளான் வளர்ப்பு அறை: காளான் விதை பரவும் அறையின் வெப்பநிலை 24 முதல் 29 டிகிரி சென்டிகிரேடும், ஈரப்பதம் 85 சதவீதத்திற்கும் மேல் இருக்க வேண்டும். அறையில் மங்கிய வெளிச்சமும், நல்ல காற்றோட்டமும் தேவை.

காளான் வளர்ப்பு அறை சற்று குளிர்ச்சியாக, 23 முதல் 25 டிகிரி சென்டிகிரேடுக்குள் இருக்க வேண்டும். அறையின் தரைப் பகுதியில், 15 அடிக்கு ஆற்று மணலை நிரப்பி, நீர் தெளித்தால் குளிர்ச்சியான சூழல் உருவாகும்.

தினமும் 5 கிலோ காளான் உற்பத்தி செய்ய, விதை பரவும் அறை மற்றும் வளர்ப்பு அறை ஆகியவை 13.5 மீட்டர் நீளம், 3 மீட்டர் அகலம், 2.5 மீட்டர் உயரம் இருக்கும் வகையில் அமைக்க வேண்டும். இவற்றில் தினசரி 20 காளான் படுகைகள் பயன்படுத்தலாம்.

வளர்ப்பு முறை: வைக்கோலை 3 முதல் 5 செ.மீ. அளவுள்ள துண்டுகளாக வெட்டி, குளிர்ந்த நீரில் 6 மணி நேரமும், வெந்நீரில் 6 மணி நேரமும் வைத்து, தொற்று நீக்கம் செய்ய வேண்டும். ஒரு காளான் படுகை தயாரிக்க 500 கிராம் வைக்கோல் தேவை. அரை கிலோ காளான் விதையில் 2 காளான் படுகைகள் தயாரிக்கலாம்.

பாலிதீன் பையின் அடிப்பகுதியை, நூலால் கட்டிவிட்டு, 5 செ.மீ. உயரத்திற்கு தொற்று நீக்கிய வைக்கோலை நிரப்பி, அதன்மீது 30 கிராம் காளான் விதையைத் தூவ வேண்டும். இதேபோல வைக்கோல் 5 அடுக்கும், காளான் விதை 4 அடுக்கும் மாறி மாறி இருக்கும் வகையில், பைகளில் நிரப்பி மேல் பகுதியை நூலால் கட்டிவிட வேண்டும்.

இந்தப் பைகளை, காளான் விதை பரவும் அறையில் மர அடுக்குகளில் 12 முதல் 15 நாள்கள் வரை வைக்க வேண்டும். பின்பு, பாலிதீன் பைகளை முழுமையாக நீக்கி, காளான் படுகைகளை வளர்ப்பு அறைக்கு மாற்ற வேண்டும்.

காளான் படுகை மீது காலை, மாலை நேரத்தில் தண்ணீர் தெளிக்க வேண்டும்.

3 நாள்களில் மொட்டுகள் தோன்றி, காளான் வளர்ந்துவிடும். முழு வளர்ச்சியைடைந்த காளான்களை அறுவடை செய்ய வேண்டும். ஒரு காளான் படுகையிலிருந்து 500 கிராம் காளான் அறுவடை செய்யலாம். தற்போது, விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ காளான் ரூ. 60-க்கு கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

விவசாயிகள் குறைந்த உற்பத்தி செலவில், துணைத் தொழிலாக காளான் வளர்ப்பில் ஈடுபட்டு அதிக லாபம் பெறலாம். காளான் வளர்ப்பு குறித்து தொழில்நுட்ப ஆலோசனைகள் பெறுவதற்கு, தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களைத் தொடர்புகொள்ளலாம். அதிக அளவில் காளான் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, அரசு மானியத்துடன் கடனுதவி வழங்கி வருகிறது என எஸ். முத்தையா தெரிவித்தார்.

**கோடை வெப்பத்தில் இருந்து கோழிகளை காக்க நூதன முயற்சி**

First Published : 20 May 2010 11:00:28 AM IST

பல்லடம், மே 19: கோடை வெப்பத்தில் இருந்து கோழிகளைக் காப்பாற்ற நூதன முயற்சி மேற்கொண்டுள்ளனர்.
÷பல்லடம் பகுதியில் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகள் பெருமளவு ஒடுகள், ஆஸிபெஸ்டாஸ் கூரை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இவை கோடையில் அதிக வெப்பத்தை அளிக்கிறது; மழைக் காலத்தில் மட்டுமே கோழிகளுக்கு ஏற்ற இதமான கதகதப்பை தருகிறது.
÷தற்போது பல்லடம் பகுதியில் அதிக வெப்ப நிலை நிலவுகிறது. இதனால் வெப்பத்தைத் தாக்குப்பிடிக்க முடியாமல் பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகள் இறப்பது அதிகரித்துள்ளது. 4 சதமாக இருந்த இறப்பு தற்போது 8 சதமாக உயர்ந்துள்ளது. ÷கோழிகளைக் காப்பாற்ற, குளிர்ச்சி ஏற்படுத்த பண்ணை மேற்கூரையின் மீது தென்னை ஒலைகளைப் பரப்பி, சொட்டுநீர்ப் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சி குளிர்ச்சி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் கோழிகள் இறப்பு சதவிகிதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**அறந்தாங்கியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் திறப்பு**

First Published : 20 May 2010 11:36:15 AM IST

அறந்தாங்கி, மே 19: அறந்தாங்கி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் புதன்கிழமை திறக்கப்பட்டது.

திறப்பு விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் ஆ. சுகந்தி தலைமை வகித்தார். நிலையத்தை அவர் திறந்துவைத்தார். விவசாயிகள் தரமான தேங்காய்களை நிலையத்துக்கு கொண்டுவர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். உலர் களம் அமைக்கும் திட்டம் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது என்றும் இந்த நிலையத்தை வெற்றியைப் பொறுத்து பிற இடங்களிலும் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கூட்டுறவு மண்டல இணைப் பதிவாளர் த. ரமணிதேவி, டான்பெட் மண்டல அலுவலர் வை. மோகன், அறந்தாங்கி வேளாண்மை உதவி இயக்குநர் இராம. சிவகுமார், வேளாண் அலுவலர் எம். கருணாநிதி, தென்னை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் ஆ.மு. சண்முகசுந்தரம், செயலாளர் ஆர். சுப்பையா, பொருளர் டி.ஏ.என். பீர்ஷேக், செய்தி தொடர்பாளர் ராசி. மூர்த்தி, ஒருங்கிணைப்பாளர்கள் பி. செல்லத்துரை, ஆ. ரவீந்திரகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப் பதிவாளர் அ. அமிர்தராஜ் வரவேற்றார். மாவட்ட ஒன்றிய தனி அலுவலர் த. பாண்டிதுரை தொகுத்து வழங்கினார். விற்பனைச் சங்க தனி அலுவலர் எஸ். மெய்யப்பன் நன்றி கூறினார்.

**குடிநீர்த் தட்டுப்பாடு போக்க அமராவதி அணை திறக்க திட்டம்**

First Published : 20 May 2010 11:00:41 AM IST

உடுமலை, மே 19: கரையோர கிராமங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தேவைகளைக் கருத்தில் கொண்டு, வியாழக்கிழமை அமராவதி அணை திறக்கப்படும் என்று தெரிகிறது.

÷உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணை மூலம் பழைய மற்றும் புதிய ஆய க்கட்டு நிலங்கள் சுமார் 55 ஆயிரம் ஏக் கர்கள் பயன்பெற்று வருகின்றன. மேலும் நூற் றுக் கணக்கான கரையோர கிராமங்களின் குடிநீர்த் தேவைகளை அமரா வதி அணை பூர் த்தி செய்து வருகிறது.

÷கோடையில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியை அடுத்து, அணையின் நீர்இருப்பு குறைந்தது. ஆனால் கடந்த சில நாட்க ளாக பெய்துவரும் கோடை மழையால் அணையின் நீர்இருப்பு சிறிது உயர்ந்துள்ளது.

÷இந்நிலையில் கடும் வறட்சி காரணமாக கரையோர கிராமங்களில் உள்ள குடிநீர்த் திட்டங்கள் அனைத்தும் முடங்கும் நிலை ஏற்பட்டு வருகிறது.

இதனால் நூற்றுக் கணக்கான கிராமங்களில் மக்களுக்குத் தேவையான குடிநீரை வழங்க முடியாமல் உள்ளாட்சி நிர் வாகங்கள் திணறி வருகின்றன.

÷குடிநீர்த் தேவைகளுக்காக அமராவதி அணையை திறக்கக் கோரி மாவட்ட நிர்வாகத்துக்கு தொடர்ந்து கோரிக்கைகள் விடப்பட்டன. அணையைத் திறக்க பொதுப் பணித் துறையினர் அரசுக்கு ஒரு முன்வரைவை அனுப்பி வைத்திருந்தனர்.

÷இது குறித்து பொதுப்பணித் துறையினர் புதன்கிழமை கூறியது:

÷புதன்கிழமை காலை 8 மணி நிலவரப்படி, அணையில் நீர்இருப்பு 30.68 அடியாக இருந்தது. அணைக்கு 16 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

இந்நிலையில் நூற்றுக் கணக்கான கரையோர கிராமங்களின் குடிநீர்த் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்குடன் அணையைத் திறக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

÷அதாவது நான்கு நாட்கள் தினமும் 700 கனஅடி தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசு உத்தரவு கிடைத்த வுடன் அநேகமாக வியாழக்கிழமை அணை திறக்கப்படும், என்றனர்.

**வேளாண்மை, வர்த்தகத்தில் ஒத்துழைப்பு: இந்தியா - வியத்நாம் முடிவு**

First Published : 21 May 2010 12:00:00 AM IST

ஹானோய், மே 20: வேளாண்மை மற்றும் வர்த்தகத்தில் ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்க இந்தியாவும், வியத்நாமும் ஒப்புக் கொண்டுள்ளன.

இது தொடர்பாக கூட்டுக்குழுவை அமைக்கவும் இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.

மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் சுபோத் காந்த் சகாய் தலைமையிலான குழு வியத்நாமுக்கு பயணம் மேற்கொண்டுள்ளது.

வியத்நாம் வேளாண்துறை அமைச்சர் கவோ டியூஸ் பாத், சகாய் புதன்கிழமை இரவு சந்தித்துப் பேசினார். அப்போது உணவுப் பதப்படுத்துதல் துறையில், இந்தியாவுடனான ஒத்துழைப்பு வியத்நாம் மேலும் அதிகரிக்க வேண்டும் என்ற இந்தியாவின் விருப்பத்தை தெரிவித்தார். இதுதவிர வியத்நாம் நிறுவனங்கள் இந்திய உணவுப் பதப்படுத்தல் துறையில் மூதலீடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

வியத்நாம் முதலீட்டாளர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க தயாராக இருப்பதாவும் சகாய் தெரிவித்தார்.

இதனை ஏற்றுக் கொண்ட வியத்நாம் அமைச்சர், இது தொடர்பாக ஒப்பந்தங்களை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்தார். வர்த்தக ஒத்துழைப்பு, முதலீட்டில் இரட்டை வரிவிதிப்பை தவிர்ப்பது, தூதரக விவகாரம், சுற்றுலா உள்பட பல்வேறு

துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. இந்தியாவில் இருந்து கால்நடை உணவு, மொபைல் போன்கள், மருந்துப் பொருள்கள், ஜவுளி உள்பட பல பொருள்களை வியத்நாம் இறக்குமதி செய்து வருகிறது.

தினமலர்

**ஆடு வளர்ப்போர் நல வாரியம் அமைத்து அரசு உத்தரவு**

சென்னை : ஆடு வளர்ப்போர் நல வாரியம் அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. ஆடு வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள கிராமங்களில், கிராம மகளிர் பயன்பெறும் வகையிலும், ஆடு வளர்ப்பில் ஈடுபடும் போது ஏற்படும் இடர்பாடுகளை களைந்து அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கிடவும், ஆடு வளர்ப்போர் நல வாரியம் ஒன்றை தமிழக அரசு அமைத்து உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் ஆடு வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டு, அவர்களுக்கு கடன் உதவி, மானியம், உயர் ஜாதி ஆடுகள் வாங்க ஆலோசனை போன்றவைகள் வழங்கப்படும்.

**பலத்த மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

பொன்னேரி; சூறாவளி காற்றுடன் கூடிய பலத்த மழையால், சம்பா சாகுபடி பயிரிட்டுள்ள ஆயிரக்கணக் கான விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பொன்னேரி அதன் சுற்றுப்புற கிராமங்களில், ஆயிரக்கணக்கான விவசாய நிலங்களில் நெல் பயிரிடப்பட்டு வருகிறது. தற்போது சம்பா சாகுபடிக்காக விவசாயிகள் நிலங்களை உழுது, நடவு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். தொடர் மின் தட்டுப்பாட்டால், விவசாய நிலங்களில் தேவையான மின்சாரம் இன்றி மின் மோட்டார்களை இயக்க முடியாமல் விவசாயிகள் தவித்து வந்தனர். நடவு பணிகளுக்கு, தேவையான தண்ணீர் இன்றி விவசாயிகள் மிகுந்த அவதிக்கு ஆளாகி சோகத்தில் மூழ்கியிருந்தனர். ஒரு சிலர் இருக்கும் தண்ணீரை கொண்டும், ஏரிநீரை கொண்டும் நடவு பணிகளை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில் கடந்த இரு தினங்களுக்கு முன், வங்கக் கடலில் உருவான லைலா புயல் காற்றால் தமிழக கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்தது.

பொன்னேரி மற்றும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளில் சூறாவளி காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் ஏரிகளும், குளங்களும் நிரம்பி வழிகின்றன. தண்ணீரின்றி நடவு பணிகளை எப்படி மேற்கொள்வது என்று சிந்தனையில் இருந்த விவசாயிகள், இந்த திடீர் மழையை கண்டு மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நேற்று மழை இல்லாததால், விவசாயிகள் உடனடியாக தங்களுடைய விளைநிலங்களை உழுது, நடவு பணிகளை மேற்கொண்டனர். இது குறித்து விவசாயிகள் கூறுகையில் " இந்த திடீர் மழை எங்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். நடவு பணிகளை மேற்கொள்பவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இந்த மழை அமைந்துள்ளது. மேலும், ஏற்கனவே நடவு பணிகளை செய்தவர்களின் விளை நிலங்களில் இயற்கையான இந்த மழை நீரில் உள்ள சத்துக்கள் நெற்பயிர் களை புத்துணர்ச்சியுடன் வளர வழிவகைச் செய்யும்' என்று கூறினர்.

**கால்நடைகளுக்கு சிகிச்சை முகாம்**

தர்மபுரி: தர்மபுரியை அடுத்த கம்பைநல்லூரில் கால்நடை பராமரிப்பு துறை நீர்வள நிலவள திட்டம் சார்பில் கால்நடைகளுக்கு மலடு நீக்க சிகிச்சை முகாம் நடந்தது. பி.செட்டிஹள்ளி பஞ்சாயத்து தலைவர் மலர்கொடி முனியப்பன் துவக்கி வைத்தார். விவசாயி சிவலிங்கம் தலைமை வகித்தார். கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியன் திட்டம் குறித்து விளக்கினார்.

முகாமில், 30 பசுக்களுக்கு மலடு நீக்க சிகிச்சை அளிக்கப்பட்டது. 300 பசு மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகள் போடப்பட்டன. 650 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டன. 25 பசுமாடுகளுக்கு இலவச சினை ஊசி போடப்பட்டது. சிறந்த கிடாரிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கால்நடை உதவி மருத்துவர் சரவணன், இளநிலை கால்நடை உதவி மருத்துவர்கள் திருமால், தியாகசீலன், கணேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். கால்நடை உதவி மருத்துவர் கணேஷ்பாபு நன்றி கூறினார்.

**மண் ஆய்வு செய்வது அவசியம் வேளாண் அலுவலர் அட்வைஸ்**

பள்ளிபாளையம்: மண்ணில் உள்ள சத்துக்களின் அளவை அறிந்து பயிருக்கு ஏற்ற உரங்களை இடுவற்கு மண் ஆய்வு செய்வது அவசியம்' என, பள்ளிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை: மண் தன்மையை அறியவும், மண்ணில் உள்ள சத்துக்களை அறிந்து தேவைக்கு ஏற்ப உரமிடவும், உரச்செலவை குறைத்து கூடுதல் மகசூல் பெறவும் மண் பரிசோதனை செய்ய வேண்டும். மண் மாதிரி சேகரிக்க வேண்டிய இடத்தில் உள்ள இலை, சருகு, புல் முதலியவற்றை மேல் மண்ணை நீக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். சாகுபடி செய்யும் பயிரை பொறுத்து நிலத்தில் வி வடிவத்தில் குழி வெட்டி அந்த மண்ணை அப்புறப்படுத்த வேண்டும். வெட்டிய வி வடிவ குழியின் ஓரமாக குழியின் கீழிருந்து மேலாக இரண்டு புறமும் ஒரே சீராக ஒரு அங்குல கனத்துக்கு மண்ணை வெட்டி ஒரு சுத்தமான வாளியில் போட வேண்டும். ஒரு வயலில் குறைந்தது 10 அல்லது 15 இடங்களில் மண்ணை சேகரித்து ஒன்றாக கலந்து தண்டு, புல், பூண்டு,கல் போன்றவற்றை நீக்க வேண்டும். மண் ஈரமாக இருந்தால் நிழலில் உலர்த்த வேண்டும்.

சேகரிக்கப்பட்ட மண்ணை நன்றாக கலந்து அதிலிருந்து அரை கிலோ மண்ணை பகுத்தல் முறையில், ஒரு ஈரமில்லாத துணிப்பையில் இட்டு, மண் ஆய்வுக்கு அனுப்ப வேண்டும். ஒவ்வொரு பயிர் சாகுபடிக்கு முன்பும் மண் மாதிரி எடுக்க வேண்டும். பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையமும், ஆவுத்திப்பாளையம் அக்ரி கிளீனிக் மண் ஆய்வுக் கூடமும் இணைந்து மண் சேகரிப்பு முகாமை நடத்தி வருகிறது.

மண் ஆய்வு செய்ய விரும்பும் விவசாயிகளின் வயல்களுக்கு உதவி வேளாண்மை அலுவலர்களும், அக்ரி கிளீனிக் தொழில் நுட்ப உதவியாளரும் நேரில் வந்து மண் மாதிரி சேகரிக்கும் தொழில் நுட்பத்தை செயல் விளக்கம் செய்து காண்பிப்பர். மண் மாதிரி எடுத்து, ஆய்வு செய்து அதற்கேற்ப உரமிடுவதால் மண் வளம் பாதுகாக்கப்படுகிறது. மண் ஆய்வு முடிவுகள் மண்வள அட்டை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புயல் காற்றால் உப்பு உற்பத்தி பாதிப்பு : கொள்முதல் பயத்தில் வியாபாரிகள்**



ராமநாதபுரம்: கடலோர பகுதிகளில் பலத்த காற்று வீசுகிறது.  உப்பு உற்பத்தியும் பாதிக்கப்பட்டிருப்பதால், வியாபாரிகள் கலக்கம் அடைந்துள்ளனர். மழைக்காலம் முடிந்து கோடை துவங்கிய நாள் முதல், ராமநாதபுரம் பகுதியில் உப்பு உற்பத்தி அமோகமாக நடந்து வந்தது. தொடர்ந்து நிலவிய வெயிலின் தாக்கத்தால் உப்பு விளைச்சல் வழக்கத்தை விட கூடுதலாக இருந்தது. தூத்துக்குடிக்கு நிகராக ராமநாதபுரம் பகுதியிலிருந்து உப்பு விற்பனைக்கு அதிக அளவில் இம்முறை அனுப்பப்பட்டன. இந்நிலையில், "லைலா' புயலால் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக பலத்த காற்று வீசிவருகிறது.  சேகரிக்கப்படும் உப்பை கொள்முதல் செய்து எடுத்துச் செல்லும்போது மழை பெய்தால் பாதிப்பு ஏற்படும் என்று வியாபாரிகள் தயங்குவதால், உப்பு விற்பனையில் சிக்கல் எழுந்துள்ளது.  மே மாதம் இறுதி வரை உப்பு உற்பத்தி பாதிக்காமல் நடந்தால் மட்டுமே, அடுத்த பருவமழைக்கு உப்பு தட்டுப்பாடு இருக்காது என கருதப்பட்டது. லைலா புயலால் , உப்பு தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகி உள்ளது. புயல் காற்று, மழையாக மாறும் பட்சத்தில், உப்பளங்களில் நீர் தேங்கி பெரும் இழப்பு ஏற்படும் என கருதுகின்றனர். இது தவிர, "லைலா' புயலால், மன்னார் வளைகுடாவில் நடந்து வரும் சேதுசமுத்திர மாற்றுப் பாதை ஆய்வுப் பணி பாதிக்கப்பட்டுள்ளது.

**வாழையில் தண்டு துளைப்பான் வண்டு: கட்டுப்படுத்தும் முறைகள்**

கம்பம்:வாழையில் தண்டு துளைப்பான் வண்டுகளால் ஏற்படும் சேதம் மற்றும் அதை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து கம்பம் தோட்டக்கலைத்துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர். தண்டு துளைப்பான் வண்டுகள் ஐந்து முதல் ஏழு மாத வயதுள்ள வாழை தண்டினை விரும்பி உண்ணும். வாழைத் தாரின் தண்டில் வட்ட வடிவில் ஓட்டை போட்டு, தண்டுப்பகுதியை உண்ணும். சேதப்படுத்தப்பட்ட தண்டின் வழியாக நீர் மற்றும் சத்துகள் மரத்தின் மேல்பகுதிக்கு செல்வது தடுக்கப்படுவதால், இலைகள் மஞ்சள் நிறமாக மாறும். மகசூல் இழப்பு ஏற்படும்.

மரத்தின் உட்பாகத்தில் துர்நாற்றம் வீசும்.இந்த வண்டுகளை கட்டுப்படுத்த மரத்தின் அடிப்பகுதியை சுத்தமாக வைக்க வேண்டும். 2.5 மிலி குளோரிபைபாஸ் மருந்தை 1 மிலி ஒட்டுத்திரவத்துடன், ஒரு லிட்டர் நீரில் கலந்து மரத்தின் மீது பிரஷ் கொண்டு பூசலாம்.மோனோ குரோட்டாபாஸ் மருந்தினை ஊசி மூலம் மரத்தில் செலுத்தும் போது தண்டின் உட்பகுதியில் உள்ள புழுக்களும், வண்டுகளும் அழிக்கப்படும்.

தரை மட்டத்தில் இருந்து இரண்டு அடி முதல் நான்கு அடி உயரம் வரை சாய்வாக இரண்டு அங்குல ஆழத்தில் மருந்தினை செலுத்த வேண்டும். ஊசியினை செலுத்தும் போது, வண்டின் தண்டின் மையப்பகுதி பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

**ஓராண்டில் கரைந்து போகும் ரூ.2.65 கோடி உருளைக் கிழங்கு விவசாயிகள் கவலை**

ஊட்டி: "மேட்டுப்பாளையம் மண்டியில், கலாசி தொழிலாளர்களின் நிர்பந்தத்தால், நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு ஆண்டுக்கு, ரூ.2.65 கோடி இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது' என கவலை தெரிவிக்கப்பட்டது. நீலகிரி மாவட்ட உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர் சங்க பொதுக்குழு கூட்டம் ஊட்டியில் நடத்தப்பட்டது. மூத்த உறுப்பினர் நஞ்சுண்டையா தலைமை வகித்து பேசியதாவது:

நீலகிரி மாவட்டத்தில் விளைவிக்கப்படும் விளைப்பொருட்கள், மேட்டுப்பாளையம் மார்க்கெட்டுக்கு கொண்டு செல்லப்படுகிறது; இங்கு, கூலிப் பிரச்னை நிலவுவது தொடர்கதையாக உள்ளது. இந்நிலையில், கூலி முக்கியமில்லை எனக் கூறி, மூட்டைகளை எடை குறைத்து கொண்டு வர வேண்டும் என கலாசி தொழிலாளர்கள் நிர்பந்திக்கின்றனர்.

இதனால், விளை நிலத்தில் இருந்து எடுப்பது முதல் மேட்டுப்பாளையத்தில் ஏலத்துக்கு கொண்டு செல்வது வரை ஆயிரக்கணக்கில் நஷ்டம் ஏற்படும்; இதை வியாபாரிகளும் ஆதரிக்கின்றனர். விவசாயிகள் தீர்மானத்தின் படி தரும் கூலியைத் தான் வியாபாரிகள் வாங்கித் தர வேண்டுமே தவிர, தொழிலாளர்களின் நிர்பந்தத்துக்கு ஆதரவு தருவது கண்டிக்கத்தக்கது.

மூட்டைகளை எடை குறைத்து கொண்டு வரச் சொல்வது நியாயமற்றது. இப் பிரச்னையால், நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 2.65 கோடி இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. இதற்கு தீர்வு காணாவிட்டால், போராட்டம் நடத்துவதுடன், மூட்டைகளை இறக்கவும் மாற்று ஏற்பாடு செய்யப்படும். இவ்வாறு, நஞ்சுண்டையா பேசினார். தலைவர் கிருஷ்ணமூர்த்தி பேசியதாவது: காய்கறி மூட்டைகளை இறக்குவதில் கூடுதலாக கூலி வசூலிக்கப்படுகிறது.

இதை வரன்முறைப்படுத்த வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை ஏற்காமல், கலாசி தொழிலாளர்கள் போராட்டம் நடத்துவதாக அறிவித்தனர். வியாபாரிகள், சங்கத்தை அணுகியதால், மேட்டுப்பாளையம் போலீசாருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இதன் அடிப்படையில், "கூட்டுக்குழு கூட்டத்தை நடத்தி முடிவெடுக்கலாம்; கூட்டம் நடத்தும் தேதி பின் தெரிவிக்கப்படும்' என, தெரிவித்து சங்கத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மேலும், தமிழக உள்துறை செயலருக்கு புகார் அனுப்பப்பட்டு, புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதனால், காய்கறி மூட்டைகள் இறக்குவதில் விவசாயிகள், பல்லாயிரத்தை இழந்து வருகின்றனர். இதற்கு தீர்வு காண அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, கிருஷ்ணமூர்த்தி பேசினார். பொருளாளர் ஜவரப்பா, சங்க வரவு செலவு கணக்கு சமர்பித்தார்.

துணைத் தலைவர் நந்திகவுடர், இணை செயலர் ரமேஷ் பெள்ளி பேசினர். பழனிச்சாமி நன்றி கூறினார். இந்நிலையில், விவசாயிகளின் நியாயமான கோரிக்கைக்கு தீர்வு ஏற்படுத்தவில்லை எனில் போராட்டம் நடத்துவது; விவசாய இடுபொருட்களை மானிய விலையில் வழங்குவது என்பன உட்பட கோரிக்கைகளை வலியுறுத்தி, நீலகிரி மாவட்ட கலெக்டரிடம் நேற்று மனு வழங்கப்பட்டது.

**போதிய விலை கிடைக்கவில்லை பந்தலூர் விவசாயிகள் ஏமாற்றம்**

பந்தலூர்: பசுந்தேயிலைக்கு போதிய விலை கிடைக்காததால், பந்தலூர் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.பந்தலூர் பகுதி தமிழக - கேரளா மாநில எல்லையாக உள்ளதால், நீலகிரி மாவட்டத்துக்கு உரித்தான விவசாயம் மட்டுமல்லாமல், கேரள மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் விவசாயமும் இங்கு அதிகரித்துள்ளது. இருப்பினும், மாவட்ட பொருளாதார வளர்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்ததும், மாவட்டத்தின் முதுகெலும்பாகவும் உள்ள தேயிலை விவசாயத்தில் தான் அதிகளவில் விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

கடந்த சில வாரங்களாக பெய்து வந்த கோடை மழையால், தேயிலைத் தோட்டங்களில் பசுந்தேயிலை வரத்து அதிகரித்தது. பந்தலூர் பகுதியில் உள்ள பெரும்பாலானோர், வேலை தேடி சமவெளிப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து விட்ட நிலையில், பசுந்தேயிலை பறிக்க ஆட்கள் கிடைக்காமல் சிறு விவசாயிகளும், தோட்ட நிறுவனத்தினரும் திண்டாடி வருகின்றனர். பசுந்தேயிலைக்கு போதிய விலை கிடைக்காததும், ஆட்கள் பற்றாக்குறையாலும், இதை நம்பியுள்ள விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தி யுள்ளது.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திண்டுக்கல்:மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் மே 27ல் நடைபெற உள்ளது. விவசாயிகள், சங்க பிரதிநிதிகள் தங்களது கோரிக் கைகளை மனுக்களாக கொடுக்கலாம். கடந்த ஏப்ரலில் நடைபெற்ற கூட் டத்தில், விவசாயிகள் கொடுத்த கோரிக்கைகளுக் கான பதில்கள், மனுக்கள் பதியும் இடத்தில் வைக்கப்படும். சம்பந்தப்பட்ட விவசாயிகள் பார்வையிட்டு தெரிந்து கொள்ளலாம்.

**குறுகிய கால நெல்விதை மானியத்துடன் விற்பனை**

சோழவந்தான்:சோழவந்தான்,வாடிப்பட்டி பகுதி விவசாயிகளுக்காக வேளாண்மைத்துறை மையங்களில் மானிய விலையில் நெல் விதை விற்பனை செய்யப்படுகிறது.வாடிப்பட்டி வேளாண் கோட்ட உதவி இயக்குனர் ராமநாதன் கூறுகையில், "தற்போது பல மாவட்டங்களில் பரவலாக பருவ மழை பெய்து வருகிறது. இருக்கும் தண்ணீரை பயன்படுத்தி குறுகிய கால நெல்விதையினை பயிரிட்டு, கூடுதல் மகசூல் பெறுவது குறித்து வேளாண்மைத்துறை விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குகிறது. வாடிப்பட்டி,நாச்சிக்குளம், சோழவந்தான் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் குறுவை பட்டத்திற்கேற்ப, ஏ.டி.டி.,43, 45, ரக நெல்விதைகள் போதுமான அளவு விற்பனைக்கு இருப்பு உள்ளது.

இவை 105 நாள் வயதுள்ள குறுகிய ரகம். குறுவை நடவுக்கு ஏற்றது. இந்த விதை ஒரு கி.,விற்கு 5 ரூபாய் மானியத்துடன் விற்பனை செய்யப்படுகிறது, இதனை விவசாயிகள் வாங்கி கூடுதல் மகசூல் பெற்று பயனடைய வேண்டும். செம்மை நெல் சாகுபடிக்கான தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண் துணை அலுவலர் குணசேகரன், உதவி அலுவலர் அம்பிகாபதி ஆகியோர் விவசாயிகளை நேரில் சந்தித்து ஆலோசனைகள் வழங்குகின்றனர்' என்றார்.

**மானிய விலையில் விதை**

கொட்டாம்பட்டி:கொட்டாம்பட்டி வேளாண்மை அலுவலகத்தில் நெல் மற்றும் நிலக் கடலை விதை, மானிய விலையில் வழங்கப்படுவதாக வேளாண் விரிவாக்கஅலுவலர் ரவி தெரிவித்து உள்ளார்.அவர் கூறும்போது;ஆடுதுறை 39 நெல் ரகம் ஒரு கிலோ ரூ.5மானியத்திலும், நிலக்கடலை விதை ஒரு கிலோ ரூ.12 மானியத்திலும் வழங்கப்படுகிறது. ஜிப்சம் மற்றும் விசைத் தெளிப்பான் ஆகியவை 50 சதவிகித மானியத்தில் வழங்கப்படுகின்றன என்று கூறினார். தேவைப்படும்விவசாயிகள் கொட்டாம் பட்டி வேளாண் அலுவலகத்தை அணுகலாம்.

**நெல் விலை உயர்வால் விவசாயிகள்... மகிழ்ச்சி: இரண்டாம் போக அறுவடையும் தயார்**

ராஜபாளையம்: ராஜபாளையத்தில் நெல் விலை உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ராஜபாளையத்தில் முதல் போக நெல் சாகுபடி அறுவடையின் போது, விலை வீழ்ச்சி ஏற்பட்டது. 72 கிலோ எடையுள்ள அரிசி மூடை விலை 700 ரூபாய் என வியாபாரிகள் நிர்ணயித்தனர். மேலும், கொள்முதல் செய்த ஒரு மாதத்திற்கு பின் தான் பணப்பட்டுவாடா செய்ய முடியும் எனக் கூறினர்.

---

இதையடுத்து பல விவசாயிகள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும், கூட்டுறவு சங்க குடோன்களிலும் நெல் மூடைகளை வைத்து, அதன் பாதி மதிப்பில் கடன் தொகை பெற்றனர். வசதியான விவசாயிகள், தங்கள் சொந்த குடோனில் இருப்பு வைத்தனர். அறுவடை முடிந்து நான்கு மாதங்கள் ஆகியுள்ள நிலையில், தற்போது நெல்லின் விலை உயர்ந்து வருகிறது.

சன்ன ரக நெல் விலை 900 ரூபாயிலிருந்து 950 ரூபாய்(72 கிலோ கொண்ட மூடை) வரை நிர்ணயம் செய்யப்படுகிறது.இதனால் விவசாயிகள், இருப்பு வைத்திருந்த நெல்லை விற்பனை செய்ய துவங்கியுள்ளனர். ஆனால், ஒரு சில விவசாயிகள், கடந்த ஆண்டு 72 கிலோ கொண்ட மூடைக்கு 1,100 ரூபாய் வரை விலை கிடைத்ததால், இன்னும் ஒரு மாதம் காத்திருந்தால் நெல் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது என கருதி காத்திருக்கின்றனர்.

இன்னும் உயரும்: தண்ணீர் குறைவாக இருந்ததால் நடப்பாண்டில் இரண்டாம் போக சாகுபடி பரப்பளவு மிகவும் குறைந்துவிட்டது. கிணற்றில் தண்ணீர் வசதியுள்ள விவசாயிகள் மட்டுமே இரண்டாம் போக சாகுபடியை மேற்கொண்டனர். தற்போது அந்த நெற்பயிர்கள் அறுவடைக்கு தயாராகி வருகிறது. வரத்து குறைவாக இருக்கும் என்பதால், நெல் விலை குறைய வாய்ப்பில்லை.

**மக்காச்சோளத்தில் போலி விதை வேளாண்துறை எச்சரிக்கை**

உடுமலை: மக்காச்சோளம் விதையில் "போலி' விதைகளை தவிர்த்து தரமான விதைகளை வாங்கி சாகுபடி செய்து பயனடையுமாறு வேளாண் துறை எச்சரித்துள்ளது. இது குறித்து கோவை விதை ஆய்வு துணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கை: உடுமலை தாலுகாவில் தற்போது மழை துவங்கியுள்ளதால், அமராவதி மற்றும் பி.ஏ.பி., பாசனம் மற்றும் மானாவாரி நிலங்களில் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பரளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட உள்ளது. மக்காச்சோளம் விதைகள் வாங்கும் போது விவசாயிகள், விற்பனையாளர்கள் விதை உரிமம் பெற்றுள்ளனரா எனவும், கிராமங்களில் நேரடியாக வாகனங்கள் மூலம் விளம்பரம் செய்து, விற்பனை உரிமம் இல்லாமல் விற்கப்படும் விதைகளை வாங்கி ஏமாற வேண்டாம்.

விதை வாங்கும் போது விதைப்பையில் பொருத்தப்பட்டுள்ள அல்லது அச்சிடப் பட்டுள்ள விதை பெயர், ரகம், முளைப்பு திறன், புறத்தூய்மை, இனத்தூய்மை, குவியல் எண், காலாவதி நாள் மற்றுமுள்ள குறிப்புகளை பார்த்து வாங்க வேண்டும். விதை கொள்முதல் செய்யும் போது கண்டிப்பாக "பில்' வாங்க வேண்டும். அதில், பெயர், முகவரி, விதையின் பெயர், ரகம், குவியல் எண் மற்றும் காலாவதி நாள் குறிப்பிடப்பட்டுள்ளதா என அறிந்து, முழு முகவரி பில்லில் எழுதி, கையெழுத்திட்டு வாங்க வேண்டும். விதையில் தரத்தில் சந்தேகம் இருந்தால் விதைச்சான்றுதுறை, வேளாண்துறையை தொடர்பு கொள்ளவும். இவ்வாறு விதை ஆய்வு துணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**கழிவு நீரை வெளியேற்றும் தொழிற்சாலை: விவசாயம் பாதிக்கும் அபாயம்**

உடுமலை: மாசு கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளை மீறி கழிவு நீரை வெளியேற்றும் கார்பன் உற்பத்தி தொழிற்சாலையால், நிலத்தடி நீர் மாசுபட்டு பல ஆயிரம் ஏக்கரில் விவசாயம் கேள்விக்குறியாக மாறியுள்ளது. குடிமங்கலம் ஒன்றியம் பெரியபட்டி ஊராட்சிக்குட்பட்ட அப்பிலியபட்டி மற்றும் ரங்கமாபாளையம் கிராமங்களில் இரண்டு தனியார் கார்பன் உற்பத்தி தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. நாள்தோறும் பல டன் தேங்காய் தொட்டிகள் முழுமையாக எரிக்கப்பட்டு, அவற்றை பல ஆயிரம் லிட்டர் தண்ணீரில் நனைய விடுகின்றனர்.

கருப்பு நிறமாக மாறும் தண்ணீரை மாசு கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளை பின்பற்றாமல் தொழிற்சாலையினர் வெளியேற்றுவதாக விவசாயிகள் புகார் தெரிவித்து வந்தனர். தொழிற்சாலை நிர்வாகத்தினர் கழிவு நீரை பெரிய குழிகள்

தோண்டி அவற்றில் பல மாதங்களுக்கு தேக்கி வைக்க துவங்கியுள்ளனர். இதனால், படிப்படியாக கழிவு நீர் நிலத்தடி நீரில் கலக்க துவங்கியுள்ளது. இது குறித்து ஊராட்சி மற்றும் விவசாயிகள் சார்பில் ஒன்றிய அதிகாரிகளிடம் புகார் மனு அளிக்கப்பட்டது. தற்போது அருகிலுள்ள கிணறுகளில் உள்ள நீரின் தன்மை மாற துவங்கியுள்ளது. தண்ணீரின் நிறம் கருஞ்சிவப்பு நிறத்தில் மாறி கெரசின் வாடை வீசியுள்ளது. அதிர்ச்சியடைந்த விவசாயிகள் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு புகார் மனு அனுப்பினர். கழிவு நீர் வேகமாக அருகிலுள்ள கிணறுகளுக்கும், இதர நீராதாரங்களிலும் ஊடுருவியுள்ளது. கால்நடைகள் பாதிக்கப்பட்ட கிணறுகளின் தண்ணீரை குடிக்க முடியாமலும், பயிர்களுக்கு பாய்ச்சியதால் அவை கருகின.

இதனால், இரண்டு கிராமங் களிலும் பல ஆயிரம் ஏக்கரில் விவசாயம் கேள்விக் குறியாகியுள்ளது. பாதிக்கப் பட்ட கிணறுகளின் தண்ணீரை விவசாயிகள் மற்றும் ஊராட்சி நிர்வாகத்தினர் பொள்ளாச்சியிலுள்ள அரசு தர மையத்தில் ஆய்வு செய்தனர். இதில், சம்பந்தப்பட்ட தண்ணீர் குடிப்பதற்கு லாயக்கற்றது என தெரியவந்தது. இது குறித்து விவசாயிகள் மற்றும் ஊராட்சி நிர்வாகத்தினர் கூறியதாவது: கார்பன் உற்பத்தி தொழிற்சாலைகள் மேடான பகுதியில் அமைந்துள்ளன. நாள்தோறும் 10 ஆயிரம் லிட்டர் கழிவு நீர் வெளியேற்றப்படுவதால் எளிதில் நிலத்தடி நீரோடு கலந்துள்ளது. இப்பகுதி விவசாயத்தையும், பொதுமக்களையும் பாதுகாக்க உடனடியாக மாசு கட்டுப்பாட்டு வாரியம் உட்பட துறையினர் ஆய்வு நடத்த வேண்டும். இல்லாவிட்டால் அனைத்து கிராம மக்களும் ஒருங்கிணைந்து போராட்டத்தில் ஈடுபடுவோம்.இவ்வாறு தெரிவித்தனர்.

**73 ஆயிரம் கிலோ கொப்பரை கொள்முதல்**

பல்லடம்: பல்லடம் கொப்பரை கொள்முதல் நிலையத்தில் ஒரே வாரத்தில் 45 விவசாயிகளிடம் இருந்து 73 ஆயிரம் கிலோ கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பல்லடம் கொப்பரை கொள்முதல் மையத்தில் விவசாயிகளிடம் இருந்து கொப்பரை கொள்முதல் செய்வது மார்ச் 23ம் தேதி நிறுத்தப்பட்டது. இருப்பு வைக்க சேமிப்பு கிடங்குகளில் போதிய இட வசதியில்லாததால், ஏப்., மாதம் கொள்முதல் துவங்கப்படவில்லை. பல்லடம் பகுதியில் உள்ள கொப்பரை உற்பத்தி விவசாயிகள், காங்கயம் மற்றும் வெள்ள கோவிலில் உள்ள வெளிமார்க்கெட்டில் கிலோ 34 ரூபாய்க்கு கொப்பரைகளை விற்றனர். கடந்த 7ம் தேதி முதல், பல்லடம் கொப்பரை மையத்தில் மீண்டும் கொள்முதல் துவங்கியது. வாரத்தில் புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகள் மட்டும் விவசாயிகளிடம் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. 7ம் தேதி முதல் 14ம் தேதி வரையிலான ஏழு நாட்களில் மட்டும் கொப்பரை உற்பத்தி விவசாயிகள் 45 பேரிடம் இருந்து 72 ஆயிரத்து 900 கிலோ கொப்பரை, 32 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளிடம் தொடர்ந்து கொள்முதல் செய்யப்படுகிறது. வெளிமார்க்கெட்டுக்கும், அரசு கொள்முதல் நிலையத்துக்கும் இடையே ஒரு கிலோ கொப்பரைக்கு 10 ரூபாய் கொள்முதல் விலை வித்தியாசம் நிலவுவதால், அரசு கொள் முதல் மையத்தில் விற்பனை செய்யவே விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

**பருத்தி வரத்து தொடர்ந்து குறைவு**

அவிநாசி: அவிநாசியில் நடந்த பருத்தி ஏலத்துக்கு, இந்த வாரமும் வரத்து குறைந்தது. அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்துக்கு, 143 மூட்டைகளே வரத்தாக இருந்தது. சீசன் முடிந்துள்ளதால், கடந்த சில வாரங்களாகவே பருத்தி வரத்து குறைந்து காணப்படுகிறது. கடந்த வாரத்தை விட, 107 மூட்டை குறைவாக வந்திருந்தது. வரத்து குறைந்துள்ள நிலையில், அனைத்து ரக பருத்தியும் குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் வரை குறைந்து விட்டது. இந்த வார ஏலத்தில் அனைத்து ரகங்களின் விலை (குவிண்டாலுக்கு) வருமாறு:

எல்.ஆர்.ஏ., ரூ.2,250 முதல் ரூ.2,550 வரை, ஆர்.சி.எச்., ரூ.2,350 முதல் ரூ.2,650 வரை, டி.சி.எச்., ரூ.3,000 முதல் ரூ.3,600 வரை மற்றும் மட்ட ரகம் ரூ.1,600 முதல் ரூ.1,900 வரை.

பருத்தி ஏலம் குறித்து கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது:பருத்தி சீசன் முடிந்துள்ளதால், சங்கத்திற்கு வரத்து குறைந்துள்ளது. கோடை பருவ பருத்தி வரும் ஜூலை முதல் அறுவடை செய்யப்படும் என்பதால், அப்போது வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. வரத்து குறைந்துள்ள நிலையில், அனைத்து ரகங்களின் விலையும் குறைந்துள்ளது. இந்த வார ஏலத்தில், ரூ.1.16 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது. 34 விவசாயிகள், ஆறு வியாபாரிகள் பயனடைந் தனர், என்றார்.

---

தினத் தந்தி

## கையிருப்பு அதிகரித்து வருவதால் கோதுமை ஏற்றுமதி மீதான தடையை நீக்க பரிசீலனை



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*உள்நாட்டில் கோதுமை கையிருப்பு அதிகரித்து வருகிறது. எனவே, அதன் ஏற்றுமதி மீதான தடையை நீக்குவது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருவதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகத்தின் செயலாளர் ராகுல் குல்லார் தெரிவித்தார்.*
*இரண்டாவது இடம்*
*கோதுமை உற்பத்தியில் நம் நாடு, உலக அளவில், இரண்டாவது இடத்தில் உள்ளது. 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில் நாட்டின் கோதுமை உற்பத்தி 8.06 கோடி டன்னாக இருந்தது. இது, சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் 8.09 கோடி டன்னாக உயரும் என முதல் கட்ட மதிப்பீடுகள் தெரிவித்துள்ளன.*
*கோதுமை உற்பத்தி நன்கு உள்ளதையடுத்து இந்திய உணவு கழகத்தின் கோதுமை கொள்முதலும் விறுவிறுப்புடன் நடைபெற்று வருகிறது. சென்ற ஏப்ரல் மாதம் தொடங்கிய சந்தைப்படுத்துதல் பருவத்தில், இதுவரை இக்கழகம் 2.20 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்துள்ளது. இது, சென்ற பருவத்தின் இதே காலத்தில், வரலாறு காணாத அளவிற்கு, 2.54 கோடி டன்னாக*

மிகவும் அதிகரித்திருந்தது.
ஒப்பிட்டு பார்க்கும்போது, நடப்பு பருவத்தில் கோதுமை கொள்முதல் சற்றே குறைந்துள்ளது. மார்ச் மாதத்துடன் நிறைவடையும் சந்தைப்படுத்துதல் பருவத்தில் இந்திய உணவு கழகத்தின் கோதுமை கொள்முதல் 2.45 முதல் 2.50 கோடி டன் வரை இருக்கும் என மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார். கோதுமை சந்தைப்படுத்துதல் பருவம் ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான 12 மாதங்களாக உள்ள போதிலும் பெரும்பான்மை கொள்முதல் ஏப்ரல்–ஜூன் மாத காலத்தில்தான் மேற்கொள்ளப்படுகிறது.
தடை
கடந்த 2007–ஆம் ஆண்டு தொடக்கத்தில், மத்திய அரசு கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதித்தது. மேலும் கையிருப்புக்கான குறைந்தபட்ச வரம்பை நிலைநிறுத்தும் வகையில் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையும் உருவானது. கோதுமை ஏற்றுமதிக்கு தடை உள்ள போதிலும், குறைந்த அளவில் ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்திருந்தது. அண்மையில் வங்காளதேசத்துக்கும் குறிப்பிட்ட அளவு ஏற்றுமதி செய்ய ஒப்புதல் அளித்தது என்பது குறிப்பிடத்தக்கது. விரைவில் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் வகையில் தடையை முழுமையாக நீக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 16.49%–ஆக உயர்வு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
மே மாதம் 8–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், நாட்டின் உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 16.49 சதவீதமாக சற்று உயர்ந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில் 16.44 சதவீதமாக இருந்தது.
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், பழங்கள், காய்கறிகள் போன்றவற்றின் விலை அதிகரித்திருந்தது. குறிப்பாக, வெங்காயத்தின் விலை 5.73 சதவீதமும், உருளைக்கிழங்கின் விலை 0.95 சதவீதமும் உயர்ந்திருந்தது.
மேலும், உளுந்து, பச்சை பயிறு போன்றவற்றின் விலையும் தலா 2 சதவீதம் உயர்ந்திருந்தது. அதேசமயம், கச்சா ரப்பர், ஆளிவிதை போன்றவற்றின் விலை முறையே 7 சதவீதம் மற்றும் 2 சதவீதம் குறைந்திருந்தது.

**காய்கறி மண்டியில் மூடை இறக்க கூலி பிரச்சினை: ஊட்டி கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்ட விவசாயிகள்**

ஊட்டி, மே.21–

மேட்டுப் பாளையம் காய்கறி மண்டியில் மூடை இறக்குவது குறித்த கூலி பிரச்சினை தொடர்பாக விவசாயிகள் ஊட்டி யில் உள்ள மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

கலெக்டர் அலுவலகம் முற்றுகை

நீலகிரி மாவட்டத்தில் விளைவிக்கப்படும் காய்கறி களை விவசாயிகள் மேட்டுப் பாளையம் மண்டிகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்கிறார்கள். அங்கு காய்கறி மூடைகளை இறக்குவதில் பிரச்சினை உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நீலகிரி உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர் சங்க தலைவர் ஆர்.கிருஷ்ண மூர்த்தி தலைமையில் விவசாயி கள் நேற்று ஊட்டியில் உள்ள மாவட்ட கலெக்டர் அலுவ லகத்தை முற்றுகையிட்ட னர்.

50 கிலோ மூடை

பின்னர் அவர்கள் நீலகிரி மாவட்ட வருவாய் அதிகாரி குப்புசாமியை சந்தித்து பேசினார்கள். அப்போது விவசாயிகள் கூறும் போது, நீலகிரி மாவட்டத்தில் இருந்து உருளைக்கிழங்கு, காய்கறிகள் சாக்கு பைகளில் 70 கிலோ எடை (ஒரு துண்டு) என கணக்கிட்டு மேட்டுப்பாளையம் காய்கறி மண்டிக்கு கொண்டு செல்கிறோம். அங்கு இறக்கும் போது துண்டுக்கு 2.45 வீதம் ஒரு லோடு இறக்க ரூ.285 கூலி வழங்கப்பட்டு வந்தது.

தற்போது 50 கிலோ எடை யுடன் கூடிய உருளைக்கிழங்கு பைகள் மூலம் தான் உருளைக் கிழங்கு கொண்டு வர வேண்டும். அந்த மூடைகளை இறக்க ஒன்றுக்கு 3 ரூபாய் கூலி வேண்டும் என்று மூடை இறக்கும் தொழிலாளர் சங்கம் கேட்டு வருகிறது.

கட்டணங்கள் உயர்வு

மேலும் உருளைக்கிழங்கு கிரேடிங் செய்வது, அந்த கிழங்கை மூடைகளில் நிரப்பி அடுக்குவது, மூடைகளை கொண்டு செல்வது என பல்வேறு கட்டணங்கள் உயர்த்தப்பட்டு உள்ளது. மேலும் 50 கிலோ உருளைக் கிழங்கு பை பயன்படுத்த தக்கது அல்ல.

எனவே நீலகிரி மாவட் டத்தில் எப்போதும் போல உருளைக்கிழங்கு கொண்டு சென்று இறக்க பயன்படும், 70 கிலோ முதல் 90 கிலோ வரை மூடைகளை வழங்கவும், முன்பு உள்ள கூலியை வழங்க வும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாதுகாப்பு வழங்க வேண்டும்

இல்லையெனில் நீலகிரி கூட்டுறவு துறையின் என்.சி.எம்.எஸ். நிறுவனத்தில் விவசாயிகளே தங்களது தோட்ட வேலை ஆட்களை வைத்து காய்கறிகளை இறக்க அனுமதிக்க வேண்டும். அதற்கு, போலீஸ் பாது காப்பும் வழங்க வேண்டும் என கேட்டு கொண்டனர்.

இதற்கு மாவட்ட வருவாய் அதிகாரி குப்புசாமி மேட்டுப் பாளையம் உருளைக்கிழங்கு வர்த்தக சங்க தலைவர்களுட னும், பாரம் தூக்கும் தொழி லாளர் சங்க நிர்வாகி களுடன் போனில் தொடர்பு கொண்டு பேசினார். அதன் பிறகு நீலகிரி மாவட்ட வரு வாய் அதிகாரி குப்புசாமி நிருபர்களிடம் கூறியதாவது:–

கடிதம்

மேட்டுப்பாளையம் கோவை மாவட்டத்துக் குட்பட்டது என்பதால் விவசாயிகளின் பிரச்சனை குறித்து கோவை மாவட்ட கலெக்டர், மாவட்ட வருவாய் அதிகாரிக்கு கடிதம் எழுதி உள்ளோம்.

மேட்டுப்பாளையம் உருளைக் கிழங்கு வர்த்தக சங்க நிர்வாகிகளை ஊட்டிக்கு பேச்சுவார்த்தை அழைத்து உள்ளோம். இந்த பேச்சு வார்த்தைக்கு அனுப்பிய கடிதம் மேட்டுப்பாளையம் உருளைக்கிழங்கு வர்த்தக சங்கத்திற்கு தாமதமாக கிடைத்து உள்ளதால், ஊட்டி பேச்சுவார்த்தைக்கு வர வில்லை என தெரிவித்தனர்.

இது குறித்து இன்னொரு நாளில் பேசி முடிவு எடுக்க லாம் என நீலகிரி விவசாய சங்கத்தினரிடம் தெரிவித்து உள்ளேன். இவ்வாறு அவர் கூறினார். இது குறித்து நீலகிரி

உருளைக்கிழங்கு காய்கறி சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி நிருபர்களிடம் கூறியதா வது:– தனியார் காய்கறி மண்டி களில் மூடைகள் இறக்குவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தலாம். ஆனால் நீலகிரி மாவட்ட விவசாயிகளில் மேட்டுப்பாளையம் என்.சி.எம்.எஸ். நிறுவனத்தில் உருளைக்கிழங்கு மூடைகளை விவசாயிகளும், விவசாய தொழிலாளர்களும் இறக்க கோவை மாவட்ட போலீஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என கேட்டுள்ளோம் என்று கூறினார்.